**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.119/2012**

தேதி . 27.10.2021

பெயர் . அன்னாள்

க/பெ . கோவில்பிள்ளை

வயது . 40

வா.சா. 1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் என்னுடைய சொத்தில் நுழையக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் 40 வருடமாக வழக்கு சொத்தில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை வழக்கு சொத்தில் முள்செடிதான் வளர்ந்துள்ளது. வழக்குச் சொத்தில் பிரதிவாதிகள் குடிசை போட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் அந்த விபரம் தெரியுமா என்றால் நான் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் அவருடைய அறிக்கையில் குடிசை வீடு உள்ளது என்று கூறியுள்ளார் என்றால் தெரியாது. என் அம்மா இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் மீது நானும் என் அம்மாவும் ஏற்கனவே இதே சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் சர்வே எண் என்னென்ன என்றால் 124/12, 13, 14. இந்த வழக்கின் சர்வே எண் என்ன என்றால் 124/14. அந்த வழக்கை திருப்பிபெற்று தள்ளுபடி செய்யப்பட்டது (Not pressed) என்றால் சரிதான். ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து அது Not pressed செய்யப்பட்டு பிறகு புதிதாக (Fresh suit) வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் எனக்கு என்னுடைய கணவரின் அண்ணன் எழுதிக் கொடுத்தார். 1வது பிரதிவாதி ஜெயராமனின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 1வது பிரதிவாதியின் பூர்வசொத்து அவர் பெயர் SLR, பட்டா, அடங்கலில் வருகிறது என்றால் சரியல்ல. மாமனாரின் அப்பா கோவிந்தனின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கில் தாசில்தாரர், மாவட்ட பதிவாளர் அவர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. என் மாமனார் இறப்புச்

சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முந்தைய வழக்கில் என் அம்மாவின் சொத்து என்று விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் 1வது வாதி என் அம்மா தான் என்றால் சரிதான். என் அம்மாவை இந்த வழக்கில் ஏன் சேர்க்கவில்லை என்றால் என் அம்மா என் பெயருக்கு சொத்து வாங்கி கொடுத்ததால் என் பெயரில் தாக்கல் செய்துள்ளேன். பழைய வழக்கு தாக்கல் செய்தபோதும் என் பெயரில்தான் சொத்து இருந்தது என்றால் சரிதான். அ.வ.எண.55/2011 என்ன காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் இந்த வழக்கில் கேட்ட சங்கதிகள்தான் அந்தவழக்கிலும் கேட்கப்பட்டது. அ.வ.எண.55/2011ல் கிரைய லட்டர் மூலமாக சொத்து கிடைத்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் இந்த வழக்கில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். சரிதிகா என்கிற கதிர்கான் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கிராம செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் கதிர்கான் பெயர்தான் உள்ளது என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**